Ontario

# செய்தி வெளியீடு

**நிதி அமைச்சகம்**

## ஒன்ராறியோவைப் பாதுகாப்பதற்கான ஒரு திட்டம்

### ஒன்ராறியோவின் *2025 இலையுதிர்காலப் பொருளாதார அறிக்கை* மிகவும் போட்டித்திறன், மீளுந்தன்மை ஆகியவற்றுடன் எவரையும் சார்ந்திருக்காமல் தற்சார்புடைய பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான மாகாணத்தின் திட்டத்தை வெளியிடுகிறது.

**செய்திகள்** நவம்பர் 6, 2025

ரொறன்ரோ — இன்று, நிதி அமைச்சர் Peter Bethlenfalvy *ஒன்ராறியோவின் 2025 பொருளாதாரக் கண்ணோட்டம் மற்றும் நிதி மதிப்பாய்வை வெளியிட்டார்: ஒன்ராறியோவைப் பாதுகாப்பதற்கான ஒரு திட்டம்*, கால தாமதத்தை ஏற்படுத்தும் சட்டவிதிகளை அகற்றுதல், உட்கட்டமைப்பில் முதலீடு செய்தல், தொழிலாளர்களை ஆதரித்தல், சேவைகளை மேம்படுத்துதல் மற்றும் வாழ்க்கையை மிகவும் செலவு குறைந்ததாக மாற்றுதல் ஆகியவற்றின் மூலம் ஒன்ராறியோவைப் பாதுகாப்பதற்கான அரசாங்கத்தின் திட்டத்தை இது ஆதரிக்கிறது.

"தீர்வைக் கட்டணங்கள் ஒன்ராறியோத் தொழிலாளர்கள் மற்றும் சமூகங்களை நேரடியாக இலக்கு வைத்துத் தாக்கி வருவதால், ஒன்ராறியோவைப் பாதுகாப்பதற்கான அதன் திட்டத்தை நிறைவேற்றுவது என்பது அரசாங்கத்திற்கு இதற்கு முன்னர் ஒருபோதும் இல்லாத வகையில் மிக முக்கியமானதாக இருக்கின்றது. வளர்ந்து வரும் எங்கள் மாகாணத்தைக் கட்டமைப்பதற்கு, நெடுஞ்சாலைகள், போக்குவரத்து, சுகாதாரப் பராமரிப்பு மற்றும் எங்கள் சமூகங்கள் நம்பியுள்ள பிற சேவைகள் அனைத்திலும் வரலாற்றுச் சிறப்புமிக்க முதலீடுகளை நாங்கள் தொடர்ந்து செய்து வருகிறோம். குடும்பங்களுக்கான செலவுகளைக் குறைத்து, ஒன்ராறியோவின் முழுப் பொருளாதார ஆற்றலையும் வெளிக்கொணர உதவும் அதே வேளையில், நாங்கள் இதையெல்லாம் செய்கிறோம்," என்று அமைச்சர் Bethlenfalvy கூறினார். "ஒன்ராறியோவைப் பாதுகாக்க முன்னர் எப்போதும் எடுக்காத நடவடிக்கைகளை நாங்கள் எடுக்க முடிகிறது, நிதி விவேகத்திற்கான எங்கள் உறுதிப்பாட்டிற்கு நன்றி, இது ஒன்ராறியோவின் நிதிகளை ஒரு தசாப்தத்திற்கும் மேலாக அது இருந்த வலுவான நிலையில் தொடர்ந்து வைத்திருக்கிறது."

*2025 இலையுதிர்காலப் பொருளாதார அறிக்கையின்* சிறப்பம்சங்கள்:

- பெரும்பாலான புதிய வீடுகளை முதன்முறையாக வாங்குபவர்களுக்கு HST இன் முழு மாகாணப் பகுதியையும் தள்ளுபடி செய்தல். மத்திய அரசுச் சட்டம் இயற்றப்பட்டால், ஒன்ராறியோவின் புதிய தள்ளுபடி, முதல் முறையாக வீடு வாங்குபவர்களுக்கு $1 மில்லியன் வரை மதிப்புள்ள புதிய வீடுகளைத் தகுதிபெறச் செய்யும் HST இன் முழு 8 சதவீத மாகாணப் பகுதியையும் நீக்கும், இதனால் வீடு வாங்குபவர்களுக்கு ஏற்கனவே உள்ள மாகாண நிவாரணத்துடன் சேர்த்துப் புதிய வீட்டின் விலையில் $80,000 வரை சேமிக்கக் கூடியதாக இருக்கும்.

- ஒன்ராறியோவின் வரிச் செயற்பாட்டுத் திட்டத்தை (Ontario's Tax Action Plan) உருவாக்குவதன் மூலம், அமெரிக்கத் தீர்வைகளின் தாக்கங்களிலிருந்து ஒன்ராறியோத் தொழிலாளர்கள், வணிகங்கள் மற்றும் சமூகங்களைப் பாதுகாக்கும் அதன் திட்டத்தை அது நிறைவேற்றுகிறது. இந்தப் பணி, ஒன்ராறியோவின் தனிநபர் மற்றும் பெருநிறுவன வருமான வரிகளைப் புதுப்பிப்பதில் கவனம் செலுத்தும், இது அதிக வணிக முதலீட்டை ஊக்குவிக்கவும் ஈர்க்கவும், G7 இல் ஒன்ராறியோவின் போட்டித்திறனை மேம்படுத்தவும், வரவிருக்கும் ஆண்டுகள் மற்றும் தசாப்தங்களில் தனிநபர்கள் மற்றும் குடும்பங்களுக்குச் செலவுகளைக் குறைக்கவும் அல்லது நிவாரணம் வழங்கவும் உதவும். இந்த வரிச் செயற்பாட்டுத் திட்டம் குறித்த புதுப்பிப்பு *ஒன்ராறியோவின் 2026 வரவுசெலவுத் திட்டத்தில்* வழங்கப்படும்.
- சிறிய மற்றும் நடுத்தர நிறுவனங்கள் புதிய சந்தைகளில் பன்முகப்படுத்தவும் வர்த்தக மீள்தன்மையை வலுப்படுத்தவும் உதவுவதற்காக, ஒன்ராறியோவின் ஒருமித்த வர்த்தக நிதிக்குக் (Ontario Together Trade Fund - OTTF) கூடுதலாக $100 மில்லியனை முதலீடு செய்தல். இது 2025–26 ஆம் ஆண்டு தொடங்கி மூன்று ஆண்டுகளில் மொத்தத் திட்ட நிதியை $150 மில்லியனாகக் கொண்டுவருகிறது. அதிகரிக்கும் இந்த ஆதரவு, அமெரிக்கத் தீர்வைகளால் பாதிக்கப்பட்டுள்ள வணிகங்கள், உற்பத்தியை மையப்படுத்தவும், புதிய விற்பனைக் கூட்டாண்மைகளை உருவாக்கவும், மாகாணங்களுக்கு இடையேயான வர்த்தகத்தை விரிவுபடுத்தவும் உதவும்.

- ஒன்ராறியோ உற்பத்தியாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் தங்கள் செலவுகளைக் குறைக்கவும், புதிய முயற்சிகளை முன்னெடுக்கவும், மேலும் போட்டித்திறன் மிக்கவர்களாக மாறவும் உதவுதல், ஒன்ராறியோவில் தயாரிக்கப்படும் உற்பத்திக்கான முதலீட்டு வரிக் கடனை (Ontario Made Manufacturing Investment Tax Credit - OMMITC) மேம்படுத்தவும் விரிவுபடுத்தவும் கூடிய வகையில் சட்டத்தை அறிமுகப்படுத்துதல். இதில் வரிச் சலுகை விகிதத்தைத் தற்காலிகமாக 10 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக அதிகரித்தல், கனேடியக் கட்டுப்பாட்டில் உள்ள தனியார் நிறுவனங்கள் ( Canadian-controlled private corporations - CCPCs) அல்லாத நிறுவனங்களுக்கு 15 சதவீத வரிச் சலுகையை திருப்பிக் கொடுக்கத் தேவையற்ற வகையில் அணுகுவதை விரிவுபடுத்தல் ஆகியவற்றை முன்மொழிவதும் உள்ளடங்கும். மேலதிகமாக, வணிகங்களுக்கு அதிக நெகிழ்வுத்தன்மையை வழங்குவதற்காக, இப்போது இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களில் முதலீடு செய்வதற்கான OMMITC தகுதி அளவுகோல்களைத் திருத்த அரசாங்கம் முன்மொழிகிறது.
- வீட்டுப் பராமரிப்புச் சேவைகள் மற்றும் மருத்துவமனையிலிருந்து வீட்டிற்குச் செல்லும் (Hospital to Home - H2H) திட்டம் ஆகியவற்றை விரிவுபடுத்துவதற்காக மூன்று ஆண்டுகளில் $1.1 பில்லியன் தொகையை முதலீடு செய்தல். அரசாங்கத்தின் முதலீட்டில் முக்கியமான வீட்டுப் பராமரிப்புச் சேவைகளை வலுப்படுத்த $982 மில்லியனும், H2H திட்டத்தை மேம்படுத்தவும் விரிவுபடுத்தவும் $170 மில்லியனுக்கும் அதிகமான தொகையும் உள்ளடங்கும். இந்த முதலீடுகள் சுகாதாரப் பராமரிப்பு அமைப்பு மற்றும் மருத்துவமனைகள் மீதான அழுத்தங்களைக் குறைத்து, மக்கள் சரியான இடத்தில் சரியான பராமரிப்பைப் பெறுவதை உறுதிசெய்ய உதவும்.

- 5 பில்லியன் தொகை மதிப்புள்ள ஒன்ராறியோப் பாதுகாப்புக் கணக்கு (Protecting Ontario Account) மூலம் அமெரிக்கத் தீர்வைகளால் பாதிக்கப்படும் துறைகளை ஆதரித்தல். ஆகஸ்ட் மாதத்தில், அரசாங்கம் ஒன்ராறியோவைப் பாதுகாக்கும் நிதித் திட்டத்தை (Ontario Financing Program - POFP) முதன்முதலில் $1 பில்லியனுடன் தொடங்கியது, இது ஏற்கனவே steel, அலுமினியம், செம்பு மற்றும் வாகனத் துறைகளில் அதிக தீர்வைக் கட்டண விகிதங்களால் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ள, ஒன்ராறியோவைத் தளமாகக் கொண்ட வணிகங்களை ஆதரித்து வருகிறது, இதன் மூலம் அவர்கள் தங்கள் வணிகங்களைத் தொடர்ந்து நடத்தவும், தொழிலாளர்களைப் பணியில் வைத்திருக்கவும் உதவி வழங்கப்படுகிறது. மீதமுள்ள $4 பில்லியன் தொகையால் ஆதரிக்கப்படும் வகையில், அரசாங்கம் இப்போது இரண்டாவது மற்றும் மூன்றாவது திட்டங்களை உருவாக்கி வருகிறது,. இந்த முயற்சிகள் ஒன்ராறியோவின் பொருளாதார மீள்தன்மையை வலுப்படுத்தும், புதிய முயற்சிகளைத் தூண்டும் மற்றும் ஒன்ராறியோவை உலகளாவிய ரீதியில் வலுப்படுத்த விரைவான உயர் வளர்ச்சி நிறுவனங்களை ஊக்குவிக்கும்.
- 2025–26 ஆம் ஆண்டில், $33 பில்லியன் தொகைக்கும் அதிகமான முதலீடுகள் உட்பட, 10 ஆண்டுகளில் மொத்தம் $201 பில்லியனுக்கும் அதிகமான திட்டமிடப்பட்ட முதலீடுகளுடன் மாகாணத்தின் மிகவும் லட்சிய மூலதனத் திட்டத்தில் தொடர்ந்து முதலீடு செய்தல். இந்தத் திட்டம், தீர்வைக் கட்டணங்களால் ஏற்படும் பொருளாதார நிச்சயமற்ற தன்மையை எதிர்கொண்டு தொழிலாளர்களைப் பணியில் தக்க வைத்துக் கொள்ள உதவும்.

## விரைவுச் செய்திகள்

- ஒன்ராறியோவின் உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) 2025 ஆம் ஆண்டில் 0.8 சதவீதத்தாலும், 2026 ஆம் ஆண்டில் 0.9 சதவீதத்தாலும் உயரும் என்று கணிக்கப்பட்டுள்ளது, இது *2025 வரவுசெலவுத் திட்டக்* கணிப்புக்கு *ஏற்புடையதாக உள்ளது.*
- ஒன்ராறியோவின் 2025–26 பற்றாக்குறை $13.5 பில்லியனாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது - இது *2025 வரவுசெலவுத் திட்டத்தில்* வெளியிடப்பட்ட முன்னறிவிப்பை விட $1.1 பில்லியன் தொகை குறைவானதாகும். நடுத்தரக் காலத்தில், 2026–27 ஆம் ஆண்டில் $7.8 பில்லியன் தொகைப் பற்றாக்குறையையும், 2027–28 ஆம் ஆண்டில் $0.2 பில்லியன் தொகை உபரியையும் அரசாங்கம் கணித்துள்ளது.

- அரசாங்கத்தின் அணுகுமுறை அதன் நிதித் திட்டத்தின் ஒரு பகுதியாக 2027–28க்குள் வரவுசெலவுத் திட்டத்தைச் சமநிலைப்படுத்தும் பாதையைப் பராமரிக்கிறது. ஒன்ராறியோத் தொழிலாளர்கள் மற்றும் வேலைகளைப் பாதுகாக்க முக்கியமான நிதி உதவிகளை வழங்குவதற்கு ஒன்ராறியோ தன்னால் முடிந்த அனைத்தையும் செய்யத் தயாராக உள்ளது.
- 2025–26 ஆம் ஆண்டில் மாகாண நிகரக் கடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் இப்போது 37.7 சதவீதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது, இது *2025 வரவுசெலவுத் திட்டத்தில்* கணிக்கப்பட்டதை விட 0.2 சதவீதப் புள்ளிகள் குறைவானதாகும். நடுத்தர காலக் கண்ணோட்டத்தில், நிகரக் கடன்-மொத்த உள்நாட்டு உற்பத்தி விகிதம் *2025 வரவுசெலவுத் திட்டத்தின்* கணிப்புகளை விட மிதமான அளவில் குறைவாகவே இருக்கும் என்றும், இது முன்னர் கணித்த இலக்கின் அளவிலும் குறைவாகவே தொடர்ந்து இருக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.
- சமீபத்தில் வெளியிடப்பட்ட *ஒன்ராறியோவின் பொதுக் கணக்குகள் 2024–2025 (Public Accounts of Ontario 2024-2025)* பட்டியலில், ஒன்ராறியோ 2024–25 ஆம் ஆண்டில் $1.1 பில்லியன் பற்றாக்குறையைப் பதிவு செய்துள்ளது, இது *2024 வரவுசெலவுத் திட்டத்தில்* $9.8 பில்லியன் பற்றாக்குறையாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. கடன் சுமையைக் குறைப்பதிலும், ஒன்ராறியோவின் நிதியை மீண்டும் சமநிலைக்குக் கொண்டுவருவதிலும் அரசாங்கம் தொடர்ந்து கவனம் செலுத்துகிறது.
- விரைவில், அரசாங்கம் *ஒன்ராறியோவின் 2026 வரவுசெலவுத் திட்டத்தின்* ஒரு பகுதியாக ஒன்ராறியோவைப் பாதுகாப்பதற்கான திட்டத்தின் அடுத்த கட்டத்தைத் தெரிவிக்க உதவும் ஆலோசனைகளைத் தொடங்கும், மேலும் ஒன்ராறியோவின் பொருளாதாரம் மற்றும் தொழிலாளர்களைப் பாதுகாத்தல், அதிக வேலைகளை உருவாக்குதல், வரிகளைக் குறைத்தல் மற்றும் செலவுகளைக் குறைத்தல், சிறந்த சேவைகளை வழங்குதல் மற்றும் முக்கியமான உள்கட்டமைப்புத் திட்டங்களைக் கட்டமைத்தல் ஆகியன குறித்து ஒன்ராறியோ மக்களிடமிருந்தும், அவர்களின் யோசனைகளையும் அரசு கேட்டறியும்.

## மேலதிக வளங்கள்

வாசிக்கவும் *ஒன்ராறியோவின் 2025 பொருளாதாரக் கண்ணோட்டம் மற்றும் நிதி மதிப்பாய்வு: ஒன்ராறியோவைப் பாதுகாப்பதற்கான ஒரு திட்டம்*

வாசிக்கவும் *ஒன்ராறியோவைப் பாதுகாப்பதற்கான திட்டத்தின் சிறப்பம்சங்கள்*

வாசிக்கவும் பின்புலம் (Backgrounder): பொருளாதார மற்றும் நிதிக் கண்ணோட்டம்

வாசிக்கவும் *2025 வரவுசெலவுத் திட்டம்: ஒன்ராறியோவைப் பாதுகாப்பதற்கான ஒரு திட்டம்*

---

## ஊடகத் தொடர்புகள்

**Colin Blachar**
அமைச்சர் அலுவலகம்
Colin.Blachar@ontario.ca

**Scott Blodgett**
நிதி அமைச்சகம்
Scott.Blodgett@ontario.ca

**news.ontario.ca/mof/en**
*Disponible en français*